DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 149/2024** |
| Deposition of Witness for | : PW 10 |
| Name | : அருணாச்சலம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 08.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 8th January 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது தர்மத்துாரணியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன்., எதிரி அரிச்சந்திரனை எனக்கு தெரியும்.. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

அரசுதரப்பில் குறுக்குவிசாரணை

TN 76 W 8767 என்ற பதிவெண் கொண்ட வாகனம் என்னுடையதுதான். அந்தவாகனம் 22.08.2013 ம் தேதி காலை 6.30 மணிக்கு தளவாய்புரம் கிராமத்தல்

வைத்து விபத்துக்குள்ளானதா என்றால் விபத்துக்குள்ளானதாக சொன்னார்கள். அன்று யார் பணியில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை டிரைவர்கள் என்னிடம் பணிபுரிந்தார்கள் என்றால் 3 டிரைவர்கள் பணிபுரிந்து வந்தனர். அந்த 3 டிரைவர்களுள் அரிச்சந்திரன் ஒருவர் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட பின்பு என்னுடைய வாகனத்தை எங்கு வைத்து பெற்றுக்கொண்டேன் என்றால் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் பெற்றுக்கொண்டேன். சம்பவதினத்தன்று எந்த ஓட்டுநர் வண்டியை ஓட்டிச்சென்றார் என்று காவல்நிலையத்தில் வைத்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என்னிடம் எத்தனை வாகனங்கள் இருந்தன என்றால் 3 வாகனங்கள் இருந்தன. அந்த 3 வாகனங்களை வைத்து வாடகைக்கு விட்டு தொழில் செய்து வந்தேன். 2013 வருடத்தில் நான் கேப்ஸ் வைத்து தொழில் செய்து வந்தேன் என்றால் சரிதான். அதன் நிர்வாகத்தை யார் பார்த்து வந்தார் என்றால் எனது தம்பி பார்த்து வந்தார். எனது தம்பி பெயர் என்னவென்றால் சுந்தரராஜா. நான் காவல்நிலையத்தில் வண்டியை வாங்கும்போது என்ன எழுதிக்கொடுத்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனது உறவினர் என்றால் சரிதான். எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**